★ அரசு-புலிகளுக்கு இடையிலான கடிதங்கள்

மாநகராட்சி மன்று
-9-1-1995

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 25 இதழ் 339
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 9-1-1995

## நாடாளுமன்றில்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் மற்றும் யுத்நிறுத்தம் குறித்து இதுவரை நாட்களும் அரசுக்கும் விடுதலை புலிகளுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் அனைத்தும் விரைவில் நாடாளுமன றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற திருமதி சந்திரிகா பிரதமராக பதவி ஏற்றது முதல் இதுவரைகாலமும் சந்திரிகா அரசுக்கும் விடுதலைப்புலிகளின் தலைவருக்கும்

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ராணுவம் சந்திக்க ஏற்பாடு?

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பு தொடர்பாக இலங்கை இராணுவப் பிரதிநிதிகளுக்கும், விடுதலை புலிகளின் இராணுவப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இச்சந்திப்பு நேற்று நடைபெற இருந்ததாகவும், எனினும் இதை விடுதலைப் புலிகள் ஒத்திவைத்துள்ளதாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

★ அரசு-புலிகளுக்கிடையில்

# மூன்றும் கட்டப் பேச்சுக்களில்

# பாதை திறப்பே முக்கிய விடயம்

## ஆனையிறவா? பூநகரியா?

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் 3ம்கட்டப் பேச்சுவார்த்தையில் யாழ் குடாநாட்டிற்கான பொருத்தமானபாதை திறப்பது பற்றியே முக்கியமாக ஆராயப்படலாம் என்று பி. பி. ஸி. சிங்கள சேவை தெரிவித்தது.

அரசு பூநகரிபாதையையும், ஆனையிறவையையும் திறந்துவிடுவதற்கு திட்டம் வகுத்துள்ளதென்றும், ஆனையிறவுப் பாதையால் குடாநாட்டுக்குள் கனரக வாகனங்களைக் கொண்டு செல்வதற்கும் பூநகரிப் பாதையால் மக்கள் பயணம் செய்யலாம் என்றும் அரசு எண்ணியிருப்பதாகவும் பி. பி. ஸி தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

படையினர்

## பாதை திறப்பதை சிக்கலாக்கலாம்

(கொளும்பு)

யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்து பாதையை திறக்கும் விடயததில் படையினர் சிக்கலை தோற்றுவிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் கூறுகின்றன.

பூநகரிப் பாதையையே திறக்கவேண்டுமென புலிகள்

4ம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் பூரண அமைதி; மோதல் என தகவல் இல்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தற்போது பூரண அமைதி நிலவுவதாக இராணுவ அதிகாரிகளும், அரச உயர் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 12-00 மணக்கு அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலுக்கு வந்ததில் இருந்து வடக்கு - கிழக்கில் பூரண அமைதி நிலவுவதாகவும் இந்த உடன்பாடு மீறப்

(-4ம பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுவிலுள்ள வெளிநாட்டவர் இன்று வருவர்

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பை கண்காணிக்க வந்துள்ள வெளிநாட்டவர்கள் இன்று அல்லது நாளை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு செல்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்காணிப்பு குழுவில் இடம்பெறும் கனடா, நெதர்லாந்து, நோர்வே நாட்டைச் சேர்நத பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள 6

(2ம் பக்கம் பார்க்க)

## மோதல் தவிர்ப்பு உடன்பாடு முறியும் சாத்தியம் குறைவு!

(கொழும்பு)

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான போர் நடவடிக்கை நிறுத்தம் முறிவடையும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருப்பதாக சர்வதேச அவதானிகள் கணித்துள்ளார்கள் என 'ஏ.எப்.பி' செய்தி தெரிவித்தது.

தற்போதைய போர் நடவடிக்கை இடை நிறுத்தத்தை மேற்குலக நாட்டு கண்காணிப்பு குழுவினர் கண்காணிப்பதால் யார் தவறு

(2-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுவின் 1வது கூட்டம் இன்று

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுவின் முதலாவது கூட்டம் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் ஆறு குழுக்களில் முதல குழுவின் கூட்டம் முதலில் நேற்று நடைபெறுவதாக இருந்தது. பின்னர் இன்று நடைபெறுமென அறி

(2-ம் பக்கம் பார்க்க)

## மோதல் தவிர்ப்பு தொடர்பு ஏற்பட்டது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையேயான மோதல்தவிர்ப்பை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள், விடுதலைப்புலிகள், அரசுப் படைகள் ஆகியவற்றுக்கிடையே தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்.

வடக்கு - கிழக்கில் ஏதாவதொரு பகுதியில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு மீறப்படுமானால் அது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடனடியாக தொடர்புகொள்ளும் விதத்திலேயே முத்தரப்புக்குமிடையில் மேற்படி தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

கண்காணிப்புக் குழுவின் மூலமான

## இந்தியாவின் தலையீட்டை புலிகள் விரும்பவில்லையாம்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னையில் இந்தியாவின் மறைமுக தலையீட்டைக்கூட விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என 'ஏ. எப். பி' செய்தி தெரிவித்தது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுவில் அணி சேரா நாடுகளின் தலைமைப் பதவியை வகிக்கும் இந்தோனேசியாவையும்,

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1342)


## 11-ம் திகதி ரணில் திருமணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் திருமணம் நாளை மறுதினம் 11ம் திகதி நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் மைத்திரி என்பவரை திரு. ரணில் திருமணம் செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது. ரிவு

## பாதை திறப்பு

(மானிப்பாய்)

ஊரெழு மேற்கிலுள்ள குகதாஸ் வீதி (ஆலடி லேன்) அகலமாக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது.

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கததின் முயற்சியினால் சிறிய பாதையாக இருந்த இப்பாதை திருத்தப்பட்டு புதிய வீதியாக திறந்து விடப்பட்டுள்ளது. 71

## வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]

கடந்த 4ம் திகதி மணலாறில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் கப்டன் புரட்சிமாறன் [செல்வரத்தினம் பார்த்தீபன் கிளிநொச்சி] என்ற போராளி வீரச்சாவு அடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். ரி

## வைத்திய குழு பயணம்

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையிலுள்ள பிரெஞ் வைத்தியக் குழு வைத்திய நிபுணர் பிரான்ஸ் நாட்டுக்கு பயணமாகியமையால் இங்கு நடைபெறும் சத்திரசிகிச்சைக் கிளினிக்குகள் இம்மாதம் 10ம் திகதிக்கு பின்னரே ஆரம்பமாகவுள்ளது.

இவருக்குப் பதிலாக புதிய நிபுணர் 10ம் திகதி வந்து சேர்ந்ததும் சத்திரசிகிச்சை கிளினிக் உடன் ஆரம்பமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. - 160

## புதிய இடத்தில் இயங்குகிறது

(நெல்லியடி)

சுமார் மூன்று வருட காலமாக கடற்றொழில் ஒன்றியத்தில் இயங்கி வந்துள்ள பருத்தித்துறை கடற்றொழில் காரியாலயம் கடந்த வாரம் முதல் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு அருகில் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு வாரமும், புதன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலுமே கடற்றொழில் பரிசோதகர்களையும், அலுவலர்களையும் சந்திக்க முடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. -160

பூட்டப்பட்டிருந்த

# கடை திறக்கப்பட்டு பொருட்கள் கொள்ளை

[நெல்லியடி]

பூட்டப்பட்டிருந்த பலசரக்குக் கடை திறப்புப் பாவித்து நள்ளிரவுவேளை அங்கு உட்புகுந்த திருடர்கோஷ்டி அங்கிருந்த சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த 31ம் திகதி நள்ளிரவு மாலிசந்தியிலுள்ள பலசரக்குக் கடையில் நிகழ்ந்துள்ளது.

இரவு நேரம் கடையைப் பூட்டிய கடை உரிமையாளர் ஆலயத்திற்குச் செல்வதற்காக அருகிலுள்ள ஒருதேனீர்க் கடை உரிமையாளரிடம் திறப்புக் கோர்வையை ஒப்படைத்தாராம்.

அங்கு மேசை லாச்சிக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட திறப்புக் கோர்வையை கையாடியவர்கள் தமது திருட்டு முயற்சியை நடத்திவிட்டு திறப்பையும் பின்புறம் வீசி எறிந்துவிட்டு தலைமறைவானார்களாம்.

இதுபற்றி கடை உரிமையாளர் பருத்தித்துறை தமிழீழ காவல்துறையில் புகாரிட்டுள்ளார். 160

# மின்கம்பி இணைப்புகள் திருத்தி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மின்சாரச் சபை அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய, யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அறுந்தும், சேதமடைந்தும் இருக்கும் சிறிய மின் இணைப்பு வேலைகள், மாநகராட்சி மன்ற மின்சாரப் பகுதி ஊழியர்களினால் திருத்தி அமைக்கப்பட்டு வருவதாக மின்சாரப் பகுதிப் பொறியியலாளர் திரு. நவரத்தினராசா தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்பொழுது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மின் பிறப்பாக்கிகளை எடுத்து வருவதற்கு உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் மின் பிறப்பாக்கிகளைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டால், யாழ் நகர்ப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின் பிறப்பாக்கிகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டதும், யாழ்ப்பாணத்திற்குச் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 162-சி

வல்வெட்டித்துறையில்

# ஒலிநாடா, ஒளிப்பேழை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இரண்டு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களதும், இரண்டு வண்ணப்பட ஒளிப்பேழைகளதும் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ம் திகதி புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

கடற்புலிகளின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'உயிர்ப்பூ' வண்ணப்பட ஒளிப்பேழையும்-

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'செவ்வரத்தம் பூ' வண்ணக் குறும்பட ஒளிப்பேழையும், பெரிய பிரித்தானிய கலை, பண்பாட்டுக் கிளையினரால் வெளியிடப் பெற்ற உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்கள் அடங்கிய தேனிசை செல்லப்பாவின் ''விடுதலைப் போர் முரசு'' பாடல் ஒலிப்பதிவு நாடாவும்-

நோர்வே கலை, பண்பாட்டுக் கழகக் கிளையினர் உருவாக்கிய 'சுதந்திர தாகம்' பாடல் ஒலிப்பதிவு நாடாவுமே ஒரே மேடையில் வெளியிடப்படவுள்ளன.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளையவனின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில். மங்களவிளக்கினை நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான், விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோர் ஏற்றி வைப்பார்கள்.

வரவேற்புரையை கலை, பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் ம. அன்பரசனும், வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவார்கள். கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை இவற்றை வெளியிட்டு வைக்க யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி பெற்றுக்கொள்வார். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார். திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் வண்ணப்பட ஒளிப்பேழை இயக்குனர்கள் பொ. தாசன், ச.யேசுதாசன் ஆகியோர் பதிலுரைகளையும் திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் பகலவன் நன்றியுரையையும் நிகழ்த்துவர். ரி


# கண்ணீர் அஞ்சலி

கைதடி நுணுவில் அ. த. க. பாடசாலை அதிபர் திரு. க. இளையதம்பி அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வா சனசமூக நிலையம்
கைதடி வடக்கு

(எ 4657)


# சிமெந்து கூட்டுதாபனத்தில் 'கூரே' மோசடி

(கொழும்பு)

1980ம் ஆண்டிலிருந்து முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த சிறிசேன கூரேக்கு சிமெந்து கூட்டுத்தாபனத்தில் இருந்து மாதாமாதம் 30 லட்சம் ரூபாவுக்கு சிமெந்து வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபான பதிவேடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

அரசாங்க, கூட்டுறவுத் துறைகளுக்கு மாத்திரம் சிமெந்து கடனுதவி வழங்கும் சிமெந்துக் கூட்டுத்தாபனம். அமைச்சர் சிறிசேன கூரேக்கு கடன் அடிப்படையிலதான் இந்த சிமெந்துகள் வழங்கியுள்ளது என்று 'ராவய' பத்திரிகைச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. ம-சி

கூட்டுறவு உதவி ஆணையாளர்

# திணைக்களம் மூடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திணைக்களம் தனது பணிமனையை இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூடிக்கொண்டது. இத்திணைக்களத்தில் பணியாற்றிவந்த நான்கு கூட்டுறவு ஆணையாளர்களின் பணிகள் எவ்வாறு பெறப்பட வேண்டும் என்பது பற்றி ஆராய்வதற்கான குழுஒன்றை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் அண்மையில் தெரிவு செய்துள்ளார்.

யாழ். பிரதேசச் செயலர் கலாநிதி க. குணராசா இக்குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மற்றும் இக்குழுவின் அங்கத்தவர்களாக யாழ்.மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர், பனை தென்னை வள அபிவிருத்தி சபைத் தலைவர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், யாழ் மாவட்ட உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இக்குழுவினரின் முதலாவது கூட்டம் இன்று 9ம் திகதி திங்கட்கிழமை யாழ் பிரதேச செயலர் பணிமனை மண்டபத்தில் தலைவர் கலாநிதி குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. 162

# தமிழ் குழுக்கள் சந்தேகம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாராட்டுத் தெரிவிக்கப்படும் இந்த தருணத்தில், ஐக்கியதேசியக் கட்சியும், கொழும்பில் தங்கியுள்ள தமிழ் அமைப்புகளும் சுசப்புணர்வோடு மோதல் தவிர்ப்பை நோக்குவதாக பிரபல செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்க பி. பி. சி. சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், தமிழர் அமைப்புகள் இந்தத் 'தாக்குதல் நிறுத்தத்தால்' தங்களது கட்சியின் தலைமைகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும், இந்தக் காலத்தை புலிகள் தங்களுக்குத் தேவையான சில கருமங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவர் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை தமிழர் விடுதலைக்கூட்டணி வரவேற்றுள்ளது. இது குறித்து தாங்கள் மகிழ்ச்சியடைவதாகவும் இது நிரந்தரமான சமாதானத்திற்கும் வழிவகுக்குமென நாங்கள் நம்புகிறோம்.

இந்த மோதல் தவிர்ப்பு நடவடிக்கை இப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக இருக்க வேண்டுமெனவும் கூட்டணி தெரிவித்துள்ளது. (ம-சி)

## கண்காணிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்புகள்எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காக வானொலித் தொடர்புகள் இருக்குமென படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## மோதல் தவிர்ப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கிறார்கள் என்பது உடனடியாக வெளியாகிவிடும் என்பதால் எந்தத்தரப்பும் இலகுவாக போர் நிறுத்த மீறல்களில் இறங்காதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முந்தைய காலத்தில் இலங்கையில் அமுலுக்கு வந்த போர் நிறுத்தங்களை வெளிநாட்டு குழுக்களோ உள்நாட்டு அமைப்புகளோ கண்காணிக்கவில்லை. இதனால் போர் நிறுத்தங்கள் மீறப்பட்டபோதெல்லாம் அதனை மீறியவர்கள் யார் என்பது கண்டுபிடிக்க முடியாது போனது.

ஆனால் தற்போது வெளிநாட்டவர்கள் இதனை கண்காணிப்பதால் இந்த போர் நடவடிக்கை நிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்குமென்றே அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (சி)

## அரசு-புலிகளுக்கு

[1 பக்கத் தொடர்ச்சி)

இடையில் 15ற்கும் மேற்பட்ட கடிதங்கள் பரிமாறப்பட்டுள்ளனவாம்.

இவற்றையே விரைவில் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களை பகிரங்கப்படுத்தும் முகமாகவே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளாராம். -சி

## வெளிநாட்டவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களிலும் மேற்படி நாடுகளைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் தலைமையின்கீழ் அந்தந்த மாவட்டங்களிலிருந்துகண்காணிப்புகுழு மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும்.

எனினும் இதுவரை இக்கண்காணிப்பு குழுக்களை சேர்ந்தவர்களின் பெயர், விபரங்கள் அறிவிக்கப்படவில்லை. இக்குழுவில் இடம்பெறும் வெளிநாட்டவரின் பெயர்களை அரசு பத்திரிகைகள் மூலம் இன்று அல்லது நாளை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

மணிவாக்கு

பிறருக்குதுன்பம்தருவதைவிட பிறர்தரும் துன்பத்தால் துன்பப்படுவது மேல்

சாமுவேல் ஜான்சன்

# தனியார் மயமாக்கலால் சந்திரிகாவுக்கு நெருக்கடி

(கொழும்பு)

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளதைத் தொடர்ந்து பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கைப் பிரகடனத்தின்போது இதனை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் அரசு மேற்கொண்ட தனியார் மய மாக்கலால் பல பிரச்னைகளை அரசு எதிர்நோக்கியது. அப்போது தனியார்மயமாக்கலை கண்டித்து வந்த திருமதி சந்திரிகா தற்போது மிகவும் திட்டமிட்ட முறையிலான தனியார்மயமாக்கல் தொடர்ந்தும் அமுல் செய்யப்படுமென கூறியுள்ளார்.

ஏற்கனவே தனியார் மத்தியில் பெரும் எதிர்ப்புணர்வுகள் ஏற்பட்ட நிலையிலும் தற்போது தனியார் நிறுவனங்களில் நடைபெறும் வேலைநிறுத்தப் போராட்ட வேளையில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நிலைமையை மேலும் மோசமாக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தந்தை பண்டாரநாயக்காவினதும் தாய் சிறிமாவினதும் தேசிய மயமாக்கல் கொள்கைக்கு நேர்மாறாக இவர் தனியார்மயக் கொள்கையில் இறங்கியுள்ளதாகவும் பி. பி. சி. தெரிவித்தது. —சி

# வைத்தியர்கள் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சுன்னாகம் அரசினர் மத்திய மருந்துச்சாலையில் கடந்த எட்டு வருடங்களாக பதிவு செய்யப்பட்ட வைத்திய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் திருமதி பா. சிவானந்தன் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சித்தன்கேணியில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எஸ். கணேசலிங்கம் மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சேனைக்குடியிருப்பு மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் வி. மகேந்திரன் சுன்னாகம் அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். -72-சி

# நமது நோக்கு

## புகை குறைந்திட

சிறீலங்கா அரசு சிகரட், மதுவகைகள் ஆகியவற்றின் மீதான வரிகளை அதிகரித்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

பணப்பற்றுக் குறையைத்தவிர்க்க எம் மீதாகை வைக்கவேண்டும் என மதுப்பிரியர்களும் புகைப் பிரியர்களும் முணுமுணுக்கக்கூடும்.

ஆனால் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மீது வரிகள் போடுவது பல நாடுகளில் மக்கள் நலன் கருதி எடுக்கும் நடவடிக்கையாகும்.

பதினாறும் நூற்றாண்டிற்குப் பின் போர்த்துக்கேயர் ஆட்சிக்குப் பின்தான் சிகரட் புகைபிடிக்கும் இத்தீய பழக்கம் இந்த நாட்டிற்குள் புகுந்தது.

இன்று - உலகெங்கும் அதன் தீமை பற்றி மருத்துவர்கள் விளக்கிப் பிரசாரங்கள் செய்து வந்த காரணத்தினால் மேற்கு நாடுகளில் அதன் பாவனை வளர்ச்சி வேகம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

ஆனால் மூன்றாவது உலக நாடுகளில் பாவனை வளர்ச்சி வேகம் குறைந்தபாடில்லை.

உதாரணமாக இலங்கையில் 1972ல் 3424 மில்லியன் சிகரட் விற்பனையாகியது.

1984ல் அதன் விற்பனை எவ்வளவு தெரியுமோ? 6000 மில்லியன்.

மருத்துவ ஆய்வுகளின்படி புகைத்தலின் போது 90 சத வீதமான சிகரட்டிலுள்ள நிக்கோட்டின் என்ற நச்சுப் பொருள் இரத்தத்திற் கலக்கின்றது

அருகில் இருப்போருக்கு அதன் தாககம் என்ன? பத்துசத வீத நிக்கோட்டின் அவர்கள் இரத்தத்திலும் கலந்து விடுகிறது.

இதனால் இதயம், இரத்தக்குழாய்கள், உணவுக் கால்வாய்கள், சிறுநீரகங்கள், நரம்புத் தொகுதி ஆகியன பாதிக்கின்றன. புற்று நோயை வரவேற்கின்றது.

இப்படிப் பல கேடுகளை உணராது நாகரீகம்என்று போலிக்கெளரவத்திற்காக விளம்பரங்களில் மயங்கி மக்கள் தமது உடல் நலத்தைத்தாமே கெடுத்துக் கொள்ளலாமா

எனவே சிகரட் பாவனை குறைந்திட இத்தகைய வரிவிதிப்பு வரவேற்கக்கூடியதே!

# உணவுலொறிகள் வழிமறித்து சீருடையினரால் கொள்ளை

## மட்டு - மன்னம்பிட்டியில் சம்பவம்

(மட்டுநகர்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி உணவுப் பொருட்களுடன் சென்ற இரு லொறிகளிலிருந்த பொருட்கள், சீருடை தரித்த ஆயுதபாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மன்னம்பிட்டியில் வைத்து இந்த இரு லொறிகளையும் இடைமறித்த சீருடையினர் ஆயுதங்களைக் காட்டி லொறியில் இருந்தவர்களை பயமுறுத்தி அதிலிருந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனராம்.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையர்கள் லொறியிலிருந்து திருடப்பட்ட பொருட்களுடன் தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ சீருடையில் வந்தவர்களாலே இக்கொள்ளை நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கொள்ளையையடுத்து மன்னம்பிட்டி வீதியூடாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கு லொறிச் சாரதிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

லொறிக்கொள்ளையர்களைத் தேடி மட்டு மாவட்டத்தில் பொலிசார் வலை விரித்துள்ளனர். ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995- 01- 09
திங்கள் இரவு

08-01 இசையரங்கம்- நிகழ்ச்சியில் திரு. எம். சிறீரெங்கநாதன் அவர்கள் பாடுவார்.
08-30 செய்திகள்
08-40 நாடகம்- வானொசை 4ல் இரண்டாவது பரிசு பெற்ற நாக. தயாகரன் எழுதிய ''முகாரி''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995-01-10
செவ்வாய் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995- 01- 09
திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்- நிகழ்ச்சியில் யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்கள் பங்குபற்றுகிறார்கள்.
06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்,
06-02 நேயர் நெஞ்சம்- நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர் மன்னார் பறப்பாங்கண்டல் எனும் இடத்தைச் சேர்ந்த செல்வி ரூபி மாக்கிரட் சூசைநாதன்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என்தெரிவுகள்
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# பிலிப்பைன்சுக்கு பாப்பரசர் விஜயம்

(மணிலா)

இம்மாதம் 12-ம் திகதி பிலிப்பைன்சிற்கு நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு செல்லவிருக்கும் பரிசுத்த பாப்பரசரின் பாவனைக்காக பிலிப்பைன்ஸ் அரசு பாதுகாப்பானவாகனம் ஒன்றை வடிவமைத்துள்ளது.

''உலகில் உள்ள 70 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவரான பரிசுத்த பாப்பரசர், பாதுகாப்பாக பயணம் செய்வதற்கு இந்த வாகனம்உகந்தது'' என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் 45 நாட்களுக்குள் தயாரிக்கப்பட்ட குண்டு துளைக்காத இந்த வாகனம் மணித்தியாலத்துக்கு 90 மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

இந்த வாகனத்தில் ஐந்து பேர் இருந்து கொண்டும், நான்கு பேர் பாதுகாப்பளிக்கும் முகமாக நின்றுகொண்டும் பயணம் செய்ய முடியும். -வி-சி

# இராசி பலன்

9-1-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 25)

அட்டமி பிற்பகல் 2-06 வரை, ரேவதி பிற்பகல் 12-35 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 8-02 முதல் 9-32 வரை வரை, சுப நேரம் பகல் 12-32 முதல் 2-02 வரை.

மேடம்: முயற்சி தாமதம், வீண்விரயம், தைரியக்குறைவு

இடபம்: பதவி மாற்றம், பெண்வகை உதவி, பயணம்,

மிதுனம்: நண்பர் சகாயம், தொழில் பெருமை, தியாகம்.

கடகம்: மனவேதனை, அவமரியாதை, குடும்பபிரிவு.

சிங்கம்: விரோதிகள் பயம், துயரநிலை, அலைச்சல்.

கன்னி: பணவரவு, உறவினர் சந்தோஷம், வாக்கு வன்மை.

துலாம்; அறிஞர் சந்திப்பு, கருத்துமோதல், சுயவிரயம்.

விருச்சிகம்: குடும்ப பகைமை, அன்னியர் வெறுப்பு, தடுமாற்றம்.

தனுசு; வீண்விவாதம், கடன் பயம்' ஆணவப் போக்கு

மகரம்: பிறர்க்கு உதவுதல், காரியசித்தி, பொதுப்பணி.

கும்பம்: அமைதிக்குறை, குடும்ப சிக்கல், யோசனை.

மீனம்: பயனற்ற முயற்சி, அபவாதம், மனவிரக்தி.

ஜோஸ்யர்

# பலதும் பத்தும்

## பாக்தாத்

வரலாற்றுப் பெருமை மிக்க ஈராக்கின் தலைநகர் பாக்தாத் ஒரு காலத்தில் கேளிக்கைகளுக்கும் பேர்போன நகரமாக இருந்த காரணத்தால் ''1001 இரவுகள் நகர்'' என்றும் புகழ் பெற்றிருந்தது.

பேர்சியன் மொழியில் 'பாக்தாத்' என்பதன் கருத்து என்ன தெரியுமா? ''கடவுளால் வழங்கப்பட்டது'' என்பதாகும்.

கடவுள் நகரைத்தான் வழங்கினார்; ஆனால் மனிதன் அதனை நரகமாக்கிவிட்டான்! எட்டாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை இங்கு நடைபெற்ற போர்களிற் பலர் இறந்து பட்டனர்.

1258ல் மொங்கோலியர் கைப்பற்றியபோது எட்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். 1401ல் திமூர் கைப்பற்றிய போதும் பலர்மடிந்தனர். 1991லும் குண்டுத் தாக்குதலாற் சீரழிந்தது அண்மைக்கால வரலாறு!

—மயூரன்

இராணுவத்தினர்

# தமிழ் பெண்கள் மீது பாலியல்வன்முறை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு பூமாஞ்சோலையில் மூன்று தமிழ்ப்பெண்களை சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த முதலாம் திகதியன்றுபாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இப்பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் மூன்று தமிழ்ப்பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

இச்சுற்றி வளைப்பின்போது மேலும் பல பெண்கள் படையினரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆண்களும் படையினரால் தாக்கப்பட்டனர்.

மட்டு. தம்பலாவெளி இராணுவத்தினர் இந்தச்செயலில் ஈடுபட்டனர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தந்தையின் முன்னால் வைத்து ஒரு பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் 1994 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சையில் வர்த்தகத் துறையில் தேசிய ரீதியில் 3ம் இடத்தையும், மாவட்ட ரீதியில் 1ம் இடத்தையும் பெற்ற பே. மதிதரன், மற்றும் திறமைச் சித்திகளைப்பெற்ற க. சுதாகரன், அ. அலஸ்ரீன் குமார் ஆகியோருக்கான பாராட்டு விழாஇன்று நண்பகல் 12 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது. ரி

உற்பத்தியைப் பெருக்குவோம்
ஊக்கமாய் உழைத்திடுவோம்

# போர் நிறுத்தம் மட்டும் இனப்பிரச்னைக்கு தீர்வாகாது

— ஹரி குணதிலக கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்னைக்குப் போர் நிறுத்த நடவடிக்கை மட்டுமே தீர்வாகாது. உடனடியான அரசியுல் தீர்வே போர் நிறுத்த மீறல்களைத் தடுக்கும் என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த நடவடிக்கைக் காலத்தில் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காணும் நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். இல்லையேல் போர்நிறுத்த மீறல்கள் இடம்பெறும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகள் முன்னைய காலங்களில் போர் நிறுத்தங்களின்போது, தம்மைப் பலப்படுத்தி வந்துள்ளனர். இது குறித்துப் படையினர் சந்தேகம் கொண்டுள்ளதால் இச்சந்தேகத்தை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஹரி குணதிலக தெரிவித்துள்ளார். -சி

## குருநகர் கடலில் மீனவரை படையினர் தாக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் நேற்று அதிகாலை மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நெருங்கிய கடற்படையினர் அவர்களை தாக்காது நட்புணர்வுடன் உரையாடியதுடன் மீனவரிடம் இருந்து மீன்களையும் பெற்றுச் சென்றனராம்

மீனவர்கள் நேற்று கடற்பகுதியில் கணிசமான அளவு தூரம் முன்னேறிச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதாகவும் அம்மீனவர்கள் தெரிவித்தனர்,

இதேவேளையில் யாழ்ப்பாணம், மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் கடல் உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

## அநுராதபுரம் பகுதியில் ரயில், பஸ் கொள்ளையர் பற்றி பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

அனுராதபுரம் வழியாகச் செல்லும், பஸ்வண்டிகளிலும் ரெயில்களிலும் பயணம்செய்யும் பிரயாணிகளிடமிருந்து உடமைகளைக் கொள்ளையடிப்பதற்காகத் தந்திரவழி ஒன்றை கையாளும் திருட்டுக் கும்பல் பற்றி பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இந்த திருட்டுக் குழுவினர் மயக்கமருந்து பூசிய மிட்டாய்களை அல்லது சீனி உருண்டைகளை அப்பாவிப் பயணிகளுக்கு கொடுக்கிறார்கள். பயணிகள் மயக்கமுற்றதும், இந்தத் திருட்டுக் குழுவினர் அவர்களின் நகைகளையும் ஏனைய பொருட்களையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகிவிடுகின்றனர் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அறிமுகம் இல்லாத ஆட்களிடமிருந்து எதையும் வாங்கி உண்ணவேண்டாம் என்று பொலிசார் பொது மக்களை கேட்டுள்ளனர். ம-சி

## வடக்கு-கிழக்கில் அமைதி வேண்டி சமாதானப் பேரணி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பூரண சமாதானம் நிலவ வேண்டி சமாதானப் பேரணி ஒன்று, நேற்று தென்பகுதியில் நடாத்தப்பட்டது.

சிங்கள-தமிழ்-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பெரும் தொகையானோர் இச்சமாதானப் பேரணியில் கலந்துகொண்டனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர், குழந்தைகள் எனப் பல தரப்பினரும் இப்பேரணியில் கலந்துகொண்டனராம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருமளவில் கலந்துகொண்ட இளைஞர்கள் தங்கள் ஆலோசனைகளைப் பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் சமர்ப்பித்தனர். க-சி

## ★ மோதல் தவிர்ப்பு: அரசு—புலிகள் முயற்சிக்கு பரவலாக பாராட்டு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தும் விதத்தில் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருவது குறித்து தேசிய சமாதான சபையை ஏற்படுத்துவதற்கான சமாதான செயலணி பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி செயலணியின் முக்கியஸ்தர் சங்கைக்குரிய பிதா ஒஸ்வார்ல்ட் பேர்த் கருத்து வெளியிடுகையில்; யுத்த நிறுத்தத்திற்கு முன்னோடியாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைக்கொள்ளப்படுவது குறித்து இருதரப்பும் மேற்கொண்ட முடிவு வரவேற்கத்தக்கது. வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் விதத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வது சம்பந்தமாக இருதரப்பும் இணங்கியுள்ளதும் பாராட்டுக்குரியது.

சமாதான முன்முயற்சிகளுக்கு மேற்கண்ட நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவை என்றும் தெரிவித்துள்ளார். (க - சி)

### புலிகள் ராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வானொலி தெரிவித்தது.

மோதல் தவிர்ப்பை எங்ஙனம் சிறந்த முறையில் கடைப்பிடிப்பது என்பது பற்றிப் பேசுவதற்கே இரு தரப்பும தொடர்புகொள்ள உள்ளன.

விடுதலைப் புலிகளின் சகல பிராந்தியத் தளபதிகளினதும் முக்கிய சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதாலேயே இலங்கை இராணுவத்தினருடனான சந்திப்பைப் புலிகள் ஒத்திவைத்ததாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது -சி

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட கடற்தொழில் சங்கங்கள, சமாசங்கள் ஒன்றியங்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கள் பி.ப. 2-00 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. தற்போது நடைமுறைக்கு வந்துள்ள மோதல் தவிர்ப்பு காலப் பகுதியில் கடல்தொழிலை மேற்கொள்வது தொடர்பாக மீனவர்கள் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி மிக முக்கியமானதும், அவசரமாமானதுமான கலந்துரையாடலாக இது அமைவதால் கடற்தொழில் சங்கங்கள், சமாசங்கள், ஒன்றியங்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி)

### மூன்றும் கட்டப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அரசாங்கம் கூறுவது போன்று ஆனையிறவுப் பாதையை உடனடியாகத் திறந்துவிட முடியாது என்று இராணுவ வட்டாரங்கள் கருதுவதாகவும் பி, பி. ஸி. தெரிவித்தது.

இதேவேளை பூநகரிப்பாதையிலிருந்து படைமுகாமை அகற்றிவிட்டு அப்பாதையையே திறக்க வேண்டுமென கடந்த பேச்சுக்களின் போது புலிகள் வலியுறுத்தியதும் அடுத்த கட்டப் பேச்சில் இதனையே வலியுறுத்தவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ம - சி]

### தொடர்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினரும் நேற்று வார்த்தைகளைப் பரிமாற்றம் செய்துகொண்டதாகவும் ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதேவேளை வடக்கு-கிழக்கில் ஏதாவதொரு பகுதியில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு மீறப்படுமானால் அதுபற்றி இராணுவத்தினருடன் புலிகளும் புலிகளுடன் இராணுவத்தினரும் இருதரப்புடனும் கண்காணிப்பு குழுவும் உடனடியாக தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

## எழுத்தாளர் 'சம்பந்தன்' லண்டனில் காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிறுகதை மூலவர் மூவருள் ஒருவரும், சாகுந்தலம் காவிய நூலாசிரியரும், பண்டிதமணி நினைவுக் காப்பு நிதியம் நிறுவ நிதி உபகரித்தவரும், முது பெரும் எழுத்தாளரும், அறிஞருமான கந்தையா திருஞானசம்பந்தன் கடந்த 7ம் திகதி லண்டனில் காலமானார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த இவரது மறைவு குறித்து, சு. இராஜநாயகம் என்பவரது திருநெலவேலி கிழக்கு, இராஜ வீதியிலுள்ள இல்லத்தில் இன்று திங்கட்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு, பிற்பகல் 4-00 மணிக்கு அஞ்சலியும், இரங்கலுரைகளும் இடம் பெறும்.

அமரர் சம்பந்தனது சிறுகதைகள் தமிழ்நாட்டில் கதைக்கோவையிலும், கடந்த ஆண்டு 20ம் நூற்றாண்டின் சிறுகதைப் பூங்கொத்துத் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. இவரது சாகுந்தலம் காவிய நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசிலும், யாழ் இலக்கிய வட்டப் பரிசிலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. -சி

## இராணுவக் கோப்ரல் சுட்டுக் கொலை

திருகோணமலை)

திருகோணமலை இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர், இராணுவ அதிகாரியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார்.

கோப்ரல் குமார ஜெயவீர என்பவரே சிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியாவார்.

இக்கொலைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. க-சி

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சார்க்' அமைப்பின் தலைமைப் பதவியை வகிக்கும் பங்களாதேஷையும் பிரதிநிதிகளை அனுப்புமாறு கேட்கலாமென அரசு கேட்டதாகவும், அதனை விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டதாகவும் பி.பி.சி. கூறியது.

நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகள் இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி நன்கு புரிந்துகொண்டிருப்பதால், அந்த நாடுகளின் பிரதிநிதிகளையே தாங்கள் விரும்புவதாகப் புலிகள் கூறியிருந்தனராம்.

இலங்கை அரசு கூறிய மேற்படி இரு அமைப்புகளிலும் இந்தியா இடம்பெற்றிருப்பதால் இலங்கைப் பிரனையில் இந்தியாவின் எவ்விதத்திலான தலையீட்டையும் புலிகள் சற்றும் விரும்பவில்லை எனவும் 'ஏ. எப். பி' செய்தி தெரிவித்தது.

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை குழப்ப இந்தியா பல்வேறு வகையிலும் முயன்று வருவதாக செய்திகள் வெளிவந்ததும் தெரிந்ததே. -சி

### படையினர்

1ம் பக்கத் தொடர்ச்சி)

வற்புறுத்தி வருவதால் அங்கிருந்து படையினரை விலக்காது பாதை திறக்கவே படையினர் இணங்குவர் என அவர்கள் தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

வடக்கு கிழக்கில் நிலவும் யுத்த சூழ்நிலையால் பூநகரியிலிருந்து படைமுகாம் வாபஸ் பெறப்படமாட்டாதென அரசும் தெரிவித்து வந்தது. தற்போது யுத்த சூழ்நிலை தணிந்து மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டுள்ளதால் பாதையை திறக்க படை முகாமை அகற்ற வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. [சி)

### வட—கிழக்கில்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டதாக எப்பகுதியிலிருந்தும் அறிவிப்புகள் வரவில்லை எனவும் அந்த அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர்.

இதேவேளை இருதரப்பினருக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலுக்கு வருவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்பும் எதுவித மோதல் சம்பவங்களும் நடைபெறவில்லை எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இருதரப்பும் தமது நிலைகளிலிருந்து மோதல் தவிர்ப்பை கடைப்பிடிப்பதாகவும் அவர் தெரிவித்ததாக 'பி. ரி. ஐ' செய்தி தெரிவித்தது. -சி


## மரண அறிவித்தல்

கந்தையா திருஞானசம்பந்தன்

[''சம்பந்தன்'' திருநெல்வேலி]

தமிழீழத்தின் சிறுகதை மூலவர் மூவருள் ஒருவரும், சாகுந்தல காவிய நூலாசிரியரும், பண்டிதமணி நினைவுக் காப்புநிதியம் நிறுவ நிதி உபகரித்தவரும், முதுபெரும் எழுத்தாளரும், எழுத்துலகில் ''சம்பந்தன்'' என அழைக்கப்பட்டவருமான யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தையா திருஞான சம்பந்தன் அவர்கள் லண்டனில் காலமானார் என்ற செய்தியை மனவேதனையுடன் அறியத்தருகிறோம்,

திருநெல்வேலி கிழக்கு, இராஜ வீதியிலுள்ள எமது இல்லத்தில் 09-01-1995 திங்கட்கிழமை துக்கமனுஷ்டித்து பிற்பகல் 4-00 மணிக்கு அஞ்சலியும் இரங்கலுரைகளும் இடம்பெறும்.

தகவல்;

சு. இராசநாயகன்.

(எ-4658)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number; B/16336/B-